JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.93/2026
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | சாமி | தொழில் | டிஎன்எஸ்டிசி ஓய்வு |
| கிராமம் | கீழஆம்பூர் | வயது | 69 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 09.06.2026

(எதிரி நீதிமன்ற காவலிலிருந்து முன்னிலைப்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கீழ ஆம்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் ஊர்க்காரர். கடந்த 07.12.2025ம் தேதி நான் என் சொந்த வேலையாக சென்னைக்கு சென்றிருந்தேன். என் வீட்டின் முன் பக்க கதவை பூட்டி நான் சாவியை எடுத்து சென்றிருந்தேன். பின்னர் 09.12.2025ம் தேதி நான் ஊருக்கு வந்து பார்த்த போது என் வீட்டின் கதவு உள்புறமாக தாழ்ப்பாள் போடபட்டிருந்தது. பின்னர் பின்பக்கமாக சென்று பார்த்த போது வீட்டின் பின்புற கதவுகள் இரண்டு உடைந்திருந்தது. நான் உள்ளே சென்று பார்த்த போது படுக்கையறையில் உள்ள மர பீரோல் சேதமடைந்திருந்தது. பீரோவில் வைத்திருந்த துணிகள் எல்லாம் கலைந்து கிடந்தது. நான் பீரோவிற்குள் ஒரு டப்பாவில் வைத்திருந்த ரூ.10,000 மற்றும் மனிபர்ஸில் வைத்திருந்த ரூ.2,000 திருடு போயிருந்தது. உடனே பக்கத்து வீட்டில் உள்ள சுந்தரம் ஐயரிடம் நடந்த விவரத்தை கூறி ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனுஅசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் ஒரு வாரம் கழித்து போலிசார் யார் மீதாவது சந்தேகம் உள்ளதா என என்னிடம் கேட்டார்கள். நான் எதிரி மீது சந்தேகம் உள்ளதாக தெரிவித்தேன். ஏற்கனவே பல திருட்டு வழக்குகள் எதிரியின்

மீது உள்ளதால் அவரின் பெயரை போலிசாரிடம் சொன்னேன். பின்னர் போலிசார் விசாரித்து எதிரி தான் என் வீட்டிலிருந்து பணத்தை திருடியதாக ஒத்துக்கொண்டுள்ளார் என என்னிடம் சொன்னார்கள். பின்னர் போலிசார் ரூ.5000 பணம் தான் எதிரியிடம் உள்ளது என்றும் மீதம் இருந்த பணத்தை எதிரி செலவழித்து விட்டதாகதகவல் சொன்னார்கள். பின்னர் நான் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனுதாக்கல் செய்து ரூ.5000 திரும்ப பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ரூ.5000 பணத்தை தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டது. நான் என் குடும்ப தேவைக்காக பணத்தை செலவு செய்து விட்டேன். மேற்படி புகைப்படம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் டிரான்ஸ்போர்ட்டில் வேலை பார்த்தேன். நான் முழு சர்வீஸிம் வேலை பார்த்து ஓய்வு பெற்றேன். நான் சென்னைக்கு கார் எடுப்பதற்காக 7.12.2025 அன்று சென்றேன். போகும் போது நெல்லை எக்ஸ்பிரஸ் இரயிலில் சென்றேன். டிக்கெட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆன்லைனில் புக் செய்தார்கள். 8 ந்தேதி காலை சென்னை சென்றுவிட்டு அன்று காலை 11 மணிக்கு சென்னையிலிருந்து கிளம்பி இரவு 1 மணிக்கு என் மகன் வீட்டிற்கு வந்தேன். என் மகன் வீடு நான் இருக்கும் அதே ஊரான தெற்கு கிராமத்தில் உள்ளது. என் மகன் வீட்டில் அன்று இரவு நான் தூங்க சென்றுவிட்டேன். சென்னையிலிருந்து திரும்பி வந்த கார் எண் ஞாபகம் இல்லை. என் வீட்டிற்கு அருகில் நெருக்கமான வீடுகள் உள்ளது என்றால் என் வீடு தான் கடைசி, அதற்கு மேல் பக்கம் தோட்டம் உள்ளது, கீழ் பக்கம் சுந்தரம் ஐயர் வீடு உள்ளது. அதற்கு அடுத்து சுமார் 60 வீடுகள் இருக்கும். என் வீட்டின் தென்புறம் பெருமாள் கோவில் உள்ளது.

பெருமாள் கோவில் இரவு 7 முதல் 7.30 மணி வரை அடைப்பார்கள். என் தெருவில் எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் இரவு 8 மணி வரை தான் ஆட்கள் நடமாட்டம் இருக்கும். என் தெருவில் திருடு போன சம்பவம் முதலில் நடந்துள்ளது என் வீட்டில் தான் என்றால் சரிதான். ரூபாய் டப்பாவில் ரூ.10,000 ம் மனிபர்ஸில் ரூ.2000 ம் வைத்திருந்தேன். ரூ.10,000 மற்றும் ரூ.2,000 எத்தனை நோட்டுகளாக வைத்திருந்தேன் என்றால் ரூ.500 நோட்டுக்கள் 7 நோட்டுகளும், ரூ.200 மற்றும் ரூ.100 நோட்டுகளும் வைத்திருந்தேன். அந்த ரூபாய் நான் ஏடிஎம்மில் எடுத்தது தான். 5 ம் தேதி ஏடிஎமில் இருந்து பணத்தை எடுத்தேன். என் வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் 5 ம் தேதி நான்

பணத்தை எடுத்த விவரம் தெரியும் என்றால்சரிதான். 7.12.2025 க்கு முன்பு உள்ள வங்கிகணக்கை தாக்கல்செய்யலாமா என்றால் தாக்கல்செய்யலாம். நான் வெளியே போகும் கதவு எந்த பக்கம் பூட்டுவேன் என்றால் 3 கதவில் பிரவாசல் கதவை உள்பக்கமாகவும், சமையல் அறை கதவை உள் பக்கமாகவும் பூட்டி இருந்தேன். அந்த இரண்டு கதவுகளும் உடைபட்டிருந்தது.

பீரோவை சாவி வைத்து பூட்டி இருந்தேன். கதிர் அரிவாள் மற்றும் தேங்காய் கீரி எங்கள்வீட்டில் உள்ளது. எனக்கு விவசாயம் கிடையாது. என் மகன் மாட்டிற்கு புல்லறுக்க அரிவாள் பயன்படுத்துவான்.மாடுகள் என் மகன் வளர்க்கிறான். என் புகாரில் யார் பணத்தை எடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் யார் மீது சந்தேகம் உள்ளது என கேட்டதால் நான் எதிரி பெயரை சொன்னேன். எதிரி எங்கள் வீட்டு கதவை உடைக்கவில்லை என்றாலும் உடைத்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சந்தேகத்தின் அடிப்படையில்தான் சொன்னேன் என்றால் முதலில் சந்தேகத்தின் அடிப்படையில் தான் நான் சொன்னேன்.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi